செ.வெ.எண்:31 நாள்:18.01.2018

# அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றிய பகுதிகளில் பள்ளிகள் மற்றும் மாற்றுத்திறனாளி குழந்தைகள் சிறப்பு சிகிச்சை முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு.

அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் செந்துறை ஒன்றியத்திற்குட்பட்ட செந்துறை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கீழராயபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, அங்கன்வாடி மையம் மற்றும் செந்துறையில் மாற்றுத்திறனாளி குழந்தைகள் சிறப்பு சிகிச்சை முகாமினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (18.01.2018) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

அரியலூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் செந்துறை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியை பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர் அவர்கள், 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு அரசு பொதுத்தேர்வு எழுதும் முறைகள், கூடுதல் மதிப்பெண்கள் பெறுதல் போன்ற சிறப்பு முறைகளை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்றுத்தர வேண்டும். கற்றல் குறைபாடு உடைய மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புகள் வைத்து, கூடுதல் மதிப்பெண்கள் பெற பள்ளி தலைமையாசிரியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

செந்துறை ஊராட்சி ஒன்றியம், கிழராயபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியை பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர் அவர்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் வருகைப்பதிவேடுகளை ஆய்வு செய்து, மாணவர்களுக்கு நல்லொழுக்கங்களை குழந்தை பருவத்திலிருந்து ஆசிரியர்கள் கற்பித்து, மாணவர்களை நல்வழிப்படுத்திடவும், மாணவர்களுக்கு வழங்கப்படும் வெவ்வேறு வகையான சத்துணவுகளை அட்டவணைப்படி வழங்கிட சம்மந்தப்பட்ட ஆசிரியர் மற்றும் அமைப்பாளருக்கு உத்தரவிட்டார்கள்.

பின்னர், செந்துறையில் 0 முதல் 6 வயது வரையுள்ள மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான சிறப்பு சிகிச்சை முகாமில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு இயன்முறை சிகிச்சை, உதவி உபகரண கருவிகள் அளவிடுதல், செவித்திறன் பரிசோதனை, மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு நுண்ணறிவு சிகிச்சை முறைகள் நடைபெற்று வருவதை பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர் அவர்கள், அனைவருக்கும் கல்வி இயக்ககம் மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித்திட்டம் மூலம் ஆரம்ப கால பயிற்சி மையங்களுக்கு வர இயலாத மாற்றுத்திறனாளி குழந்தைகளை கண்டறிந்து, குழந்தைகளின் இடங்களுக்கே சென்று அவர்களை மதிப்பீடு செய்தும், பயிற்சிகள் வழங்கிடவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் இவ்வாய்வின்போது தெரிவித்தார்கள்.

இந்தஆய்வின்போது, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனைவர்.அ.புகழேந்தி, முடநீக்கியல் வல்லுநர் சா.இராமன் ஆகியோர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**